IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
M.C.O.P.No.93/2010

Deposition of RW 3 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 14.03.2025.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சாமிகண்ணு | **Caste** | : | |
| **S/o** | : | கெம்புவீரன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் வட்டார போக்குவரத்து அலுவலகம் தருமபுரியில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். இவ்வழக்கில் சாட்சியமளிக்க தருமபுரி வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் எனக்கு அனுமதி கொடுத்துள்ளார். அதற்கான அனுமதி கடிதம் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** ஆகும். நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற அழைப்பாணையில் கலைவாணன், த/பெ.செல்வமணி, 1/205 சின்னம்பள்ளி, பென்னாகரம் தாலுகா, தருமபுரி மாவட்டம் என்பவருக்கு வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் விவரங்களை கொண்டு வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். எங்களது அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் மேற்படி நபரின் ஓட்டுனர் உரிமம் வழங்கியதற்கான ஆவணத்தின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.2** ஆகும். மேற்படி ஓட்டுநர் உரிமம் கலைவாணனுக்கு 04.01.2010 ம் தேதியன்று வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஓட்டுநர் உரிமம் 03.01.2030 அன்று முடிவடைகிறது. விபத்து தேதியான 27.10.2009 தேதியன்று மேற்படி கலைவாணனுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டிருந்ததா என்றால் மேற்படி தேதியில் ஓட்டுனர் உரிமம் இல்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

கலைவாணன் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காக என்னென்ன ஆவணங்களை எங்களது அலுவலகத்தில் சமர்ப்பித்தார் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் ஓட்டுநர் உரிமம் கியர் வைத்த வாகனங்களை ஓட்டுவதற்காக எடுப்பதற்கு முன்பாக பழகுநர் ஓட்டுநர் உரிமம் பெற வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

அவ்வாறு பழகுநர் உரிமம் பெற்றிருந்தால் ஓராண்டு காலம் வரை மேற்படி ஆவணம் செல்லும் என்றால் சரியல்ல. ஆறு மாதம் காலம் வரை பழகுநர் உரிமம் செல்லும். சா.சா.ஆ.2 ஆவணமான கலைவாணனுக்கு வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் ஆதார் அடையாள அ ட்டை வழங்குவதற்கு முன்னதாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆதார் அடையாள அட்டை மேற்படி கலைவாணனின் ஓட்டுநர் உரிமத்துடன் இணைக்கப்படாததால் கலைவாணன் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு முன்னதாக பழகுநர் உரிமம் பெற்றிருந்தாரா என்று என்னால் உறுதியாக கூற முடியாது என்றால் சரிதான். கலைவாணனின் ஓட்டுநர் உரிமத்தை பொறுத்து எங்களது அலுவலகத்தில் சாலை விதி மீறல் ஏதும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படும்போது மேற்படி வாகனத்தை ஒட்டிய ஓட்டுநருக்கு சரியான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதற்காக நடவடிக்கை எங்கள் அலுவலகத்தில் எடுக்கப்படும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

சாமிகண்ணு

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.